Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 184

திங்கட்கிழமை 29 மே 2023

வைகாசி 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




# இந்தியா – தமிழ்க் கட்சிகள் 'காதல்' இலங்கைக்கு பெரும் ஆபத்தாம்!!

## கொதிக்கிறார் வீரசேகர



கொழும்பு, மே 29

இந்தியாவும் தமிழ்க் கட்சிகளும் திரைமறைவில் காதல் கொண்டால் அது இலங்கைக்கு ஆபத்தாக அமையும். இது தொடர்பில் இலங்கை அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும் – இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத்தளபதியுமான சரத் வீரசேகர தெரித்தார். »11

## ஆனையிறவில் விபத்து குடும்பத் தலைவர் பலி!

### இன்று பரீட்சைக்குத் தோற்றும் மாணவனின் தந்தையே சாவு

கிளிநொச்சி, மே 29

ஏ - 9 வீதி ஆனையிறவு, உமையாள்புரத்தில் நேற்று மாலை இடம்பெற்ற »10

## பருத்தித்துறையில் இளைஞனின் சடலம்

### உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை

யாழ்ப்பாணம், மே 29

பருத்தித்துறையில் இளைஞனின் சடலம் வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. »10

## பொதுத்தூபி உருவாக்கப்படவேண்டும்: இன நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டு

### இப்படிச் சொல்கிறார் மஹிந்த ராஜபக்ச



கொழும்பு, மே 29

உயிரிழந்தவர்களுக்காக பொதுத்தூபி அமைக்கப்படவேண்டும். அது இன நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரித்தார்.

1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் உயிரிழந்த அனைவரது நினைவாகவும் பொதுத்தூபி அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 'போர்க்காலத்தில் இறந்தவர்களுக்காக பொதுத் தூபி அமைப்பதற்கான அமைச்சரவை அனுமதியை »10

## பொது நினைவுத்தூபி; விக்கி, டக்ளஸ் ஆதரவு

### ஏனைய தமிழ்த் தலைவர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மே 29

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் பொது நினைவுத்தூபி அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள »11

## வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு இரண்டு மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, மே 29

வாகனங்களுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை இருமடங்காக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதிகரித்த எரி »11

### ஆஸி.யில் இருந்து இலங்கைக்கு

## விமானத்தில் பயணித்த யாழ்ப்பாணத்தவர் சாவு!

கொழும்பு, மே 29

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பயணியொருவர் விமானத்தில் உயிரிழந்துள்ளார். »11

## மத முரண்பாடுகளை உருவாக்கி தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர தெரிவிப்பு

கொழும்பு, மே 29

நாட்டில் மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் »11

## ஆலயங்கள் வருமானம் உழைக்கும் வியாபார நிலையங்களாகிவிட்டன!

### யாழ். மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மே 29

பெரும் சொத்துக்கள் கொண்ட ஆலயங்கள் யாழ். மாவட்டத்தில் காணப்பட்ட போதிலும் இந்த ஆலயங்கள் எமது மக்களுக்கு என்ன செய்கின்றன? முன்னைய காலங்களில் கிராமங்களில் அமைந்துள்ள ஆலயங்களை நல்ல அருளுடைய தெய்வங்கள், பேசும் தெய்வங்கள் என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால், தற்போது »11

## பாக்கு நீரிணையைக் கடந்த 20வயது தமிழ் இளைஞன்!



மன்னார், மே 29

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவனும், ஜனாதிபதி சாரணர் விருது பெற்றவருமான தேவேந்திரன் மதுஷிகன் பாக்குநீரிணையை »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ஜூன் 19ஆம் திகதி ஆரம்பமாகும்

# ஐ.நா. அமர்வின்போது இலங்கை மீது தளர்வு

கொழும்பு, மே 29

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 53ஆவது கூட்டத்தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக இறுக்கமான போக்குக் கடைப்பிடிக் கப்படாது என்று தெரியவருகின்றது.**

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தின் அடிப்படையில் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள அமர்வில் இலங்கை தன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் விவாதித்த விடயங்கள் தொடர்பிலும் எழுத்துப்பூர்வ அறிக்கையை வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாலேயே, ஜூன் மாதம் ஆரம்பமாகும் அமர்வில் இலங்கை மீது இறுக்கமான போக்குக் கடைப் பிடிக்கப்படாது என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஜூன் மாதம் ஆரம்பமாகும் கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க், 19ஆம் திகதி மாலை இலங்கை பற்றிய வாய்மொழி அறிவிப்பை வழங்குவார். அன்றையதினமே அவர், ஈரான் மற்றும் நிகரகுவா மற்றும் இலங்கை பற்றிய தனது எழுத்துப்பூர்வ அறிக்கையையும் சமர்ப்பிக்கவுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (ம)



## கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் இலம்பித் தொற்று

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மீண்டும் இலம்பித் தொற்று அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இலம்பித் தொற்றுடன் கால்நடைகள் காணப்பட்டால் விரைந்து சிகிச்சைகளைப் பெற்று தொற்றிலிருந்து கால்நடைகளைக் காப்பாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் வடமாகாணத்தில் இலம்பித் தொற்றின் தாக்கம் தீவிரம் பெற்றிருந்தது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பயனாக அந்தத் தொற்று ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஆங்காங்கே இலம்பித்தொற்று அவதானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் தங்கள் கால்நடைகளை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-113)

## நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு பொறுப்பாக அசங்க குணவன்ச

### பின்னணி தெரியாதென நீதியமைச்சர் நழுவல்

கொழும்பு, மே 29

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவைத் தயாரிக்கும் குழுவுக்குப் பொறுப்பாக வணிகத்துறைசார் சட்டத்தரணி அசங்க குணவன்ச நியமிக்கப்பட்டுள்ளார். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் முன்மொழிவின் பிரகாரமே அவரது நியமனம் இடம்பெற்றது. இதன் பின்னணி குறித்த விவரங்கள் எனக்குத் தெரியாது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை அரசால் முன்னெடுக்கப்படுகிறது. அந்த ஆணைக் குழு தொடர்பான சட்டவரைவை தயாரிப்பதற்கான குழுவுக்குப் பொறுப்பாக சர்வதேச பொருளியல் சட்டத்தில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற வணிகத்துறை சார் சட்டத்தரணியான கலாநிதி அசங்க குணவன்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடன் இணைந்ததாக அமைக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் நாயகமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் எந்தவித பரிச்சயமும் அற்ற அசங்க குணவன்சவை நியமிப்பதற்கான உத்தேசம் ஏற்புடையதல்ல என சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் செய்தியாளர்கள் வினவியபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்;

அமைச்சர் அலி சப்ரியின் பரிந்துரையின் பிரகாரமே சட்டத்தரணி அசங்க குணவன்ச நியமிக்கப்பட்டார். அவரது பின்னணி குறித்த விவரங்கள் எனக்குத் தெரியாது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவை யார் தயாரித்தாலும் அதனை இறுதியாக நாமே பரிசீலிப்போம் - என்றார். (ச)

## எச்சரிக்கை மட்டத்துக்கு உயரும் வெப்பநிலை

கொழும்பு, மே 29

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வெப்பச் சுட்டெண் அறிவித்தலை, வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. வெப்பம் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் வெப்பச் சுட்டெண் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை 'எச்சரிக்கை' மட்டத்துக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள், முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்கவும், கடுமையான வெளிப்புற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், இலகுரக மற்றும் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியவும் வளிமண்டலவியல் திணைக் களம் அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## பௌத்தத்துக்கு எதிரான கருத்து நதாசா எதிரிசூரிய கைதானார்!

பௌத்த மதத்துக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்ட நகைச்சுவை கலைஞர் நதாசா எதிரிசூரிய கொழும்பு சர்வதேச விமானநிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்

இலங்கையிலிருந்து வெளியேற முயன்றவேளை அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நிகழ்ச்சியொன்றின்போது, பௌத்தமதம், பௌத்த தத்துவம் மற்றும் கிறிஸ்தவ மதம் ஆகியவற்றை அவமதித்தார் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று சி.ஐ.டி.யினர் தெரிவித்துள்ளனர். (ம)

# சுமந்திரன் பிரேரணை; காலம் கடந்த ஞானம்!

### எனினும் அதை வரவேற்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர்

கொழும்பு, மே 29

மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையிலேயே நடத்தவேண்டும் என்று வலியுறுத்தி எம்.ஏ.சுமந்திரன் தனிநபராக கொண்டுவந்த பிரேரணையை வரவேற்கின்றேன் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தேசிய நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நிதி இல்லை என்று குறிப்பிடும் அரசாங்கம் அமைச்சரவை விரிவுபடுத்தல், ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்டவற்றில் விசேட கவனம் செலுத்தியுள்ளது. மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் 2017ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்ட யோசனைகள் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. மாகாணசபைத் தேர்தல் புதிய சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் என்னை கடுமையாக விமர்சித்தார்.

ஆனால், இப்போது காலம் கடந்த நிலையில் பழைய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணை வரவேற்கத்தக்கது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் உற்பத்திகளுக்காக அளவுக்கதிக கிணற்றுநீர்

## இளவாலை விவசாயிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், மே 29

**யாழ்ப்பாணம் - இளவாலை வடக்கு கமக்கார அமைப்புக் குட்பட்ட பிரதேசத்திலிருந்து தனியார் நிறுவனம் ஒன்றால் அதிகளவான கிணற்றுநீர் ஐஸ் உற்பத்திக்காக உறிஞ்சப்படுகிறது. அதனால் விவசாயக் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து எதிர்காலத்தில் கிணறுகள் உவர்நீராக மாறும் சாத்தியம் காணப்படுவதுடன் எமது விவசாயச் செய்கைகளும் பாதிப்புறுகின்றன என இளவாலை கொடி முந்திரிகை செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

யாழ்ப்பாணம் - இளவாலை வடக்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவாசயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சிர்த்தார்த்தன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று கேட்டறிந்தார். இதன்போதே விவசாயிகள் மேற்படி விடயத்தை சுட்டிக்காட்டினர். இங்குள்ள பகுதிகளிலுள்ள கிணறுகளிலிருந்து ஐஸ் உற்பத்திக்கென தனியார் நிறுவனமொன்று அதிகளவான நீரை எடுத்துச் செல்கிறது. அதனால் 200க்கும் மேற்பட்ட கொடி முந்திரிகை செய்கையாளர்கள் மற்றும் ஏனைய செய்கையாளர்கள் பாதிப்புற்றுள்ளணர். கிணறுகளிலுள்ள நீர்மட்டம் வற்றி எதிர்காலத்தில் உவர்தன்மை ஏற்படும் சாத்தியம் காணப்படுகிறது. அத்துடன் மேட்டுநில செய்கையாளர்களுக்கு உரம் மானியமாக வழங்கப்படுவது இல்லை. இந்த விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென தெரிவித்த விவசாயிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனிடம் மனுவொன்றையும் கையளித்தனர்.



வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த முறை இடம்பெற்றபோது, இதே குற்றச்சாட்டு விவசாயிகளால் அந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. நாளொன்றுக்கு 10 ஆயிரம் கிலோ விவசாய உற்பத்தி கிடைக்கும் வலி.வடக்கில் உள்ள கிணறுகளில் இருந்து சட்ட விரோதமாக தண்ணீர் உறிஞ்சப்படுகின்றது என்றும் இதனால், வலி.வடக்கின் விவசாயத்துக்குப் பெரும் பாதிப்பு உள்ளது என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டியிருந்ததுடன், இதற்கொரு தீர்வை அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-125)


## அலைபேசிகள் திருட்டு சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், மே 29

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் அலைபேசித் திருட்டுக்களுடன் தொடர்புடைய மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த அலைபேசிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தொலைபேசி திருட்டுக்கள் தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கமைய மேற்கொண்ட புலனாய்வு விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கோண்டாவில், கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 22 மற்றும் 23 வயதுடையவர்கள்.

சந்தேகநபர்கள் மூவருக்கும் எதிராக வழக்குப் பதிவுசெய்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



## தேங்காய் லொறி கவிழ்ந்து விபத்து

மன்னார், மே 29

தம்புள்ளைப் பகுதியில் இருந்து மன்னார் நோக்கி தேங்காய் ஏற்றிவந்த லொறியொன்று, முருங்கன் ரயில் கடவைப் பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. நேற்று அதிகாலைவேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதி காயங்களுடன் முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். லொறியில் பயணித்தவர்கள் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-213)

## சோதனைச்சாவடிக்கு போதையில் கல்வீச்சு

### சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது கல்வீசி தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சோதனைச் சாவடி கூடாரத்தின் கண்ணாடிகள் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு நபரொருவர் கல்வீசி கண்ணாடிகளை உடைத்துள்ளார். அதனையடுத்து சந்தேகநபரை கைதுசெய்த பொலிஸார் அவரிடம் நடத்திய விசாரணையில் மதுபோதையில் கல்வீசியதாகத் தெரிவித்துள்ளார். சந்தேகநபர் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நா**ட்டில என்னதான் இலவசக்கல்வி இருந்தாலும், காசைக் கரியாக்கி, பிரைவேட் பள்ளிக்கூடங்களில படிக்க வைக்கிறதுதான் தங்கட தகுதிக்கு மரியாதை எண்டு காசு மெத்திப்போன கனபேர் நினைக்கினம். அதால பக்கத்திலயே நல்ல அரசாங்கப் பள்ளிக்கூடங்கள் இருந்தாலும், பத்துப் பதினைஞ்சு மைலுக்கு அங்கால உள்ள ஏதோ ஒரு இங்கிலிஷ் பேரில உள்ள பிரைவேட் பள்ளிக்கூடத்தில தங்கட பிள்ளையளைப் படிப்பிக்கிற '.·.பன்' இஞ்ச கூடிக்கொண்டு வருகுது. என்னதான் பிரைவேட் பள்ளிக்கூடத்தில படிக்க வைச்சாலும் அரசாங்கப் பள்ளிக்கூடங்களில வைக்கிற கொலர்ஷிப், ஓ.எல். ஏ.எல். எக்ஸாமையும் தங்கட பிள்ளையள் எடுக்க வேணுமெண்டு நினைக்கிறதுதான் ஆகப்பெரிய பகிடி. இப்பிடி அரசாங்கப் பள்ளிக்கூடங்களில நடக்கிற எக்ஸாமுக்கு எதுக்கு பிரைவேட் பள்ளிக்கூடங்களில படிப்பிக்க வைக்கோணும்?

இப்பிடித்தான் யாழ்ப்பாணத்துக்கு கொஞ்சம் தள்ளி இருக்கிற, வலிகாமம் வலயத்துக்குள்ள இருக்கிற ஒரு பிரைவேட் பள்ளிக்கூடம் ஒண்டில படிக்கிற பிள்ளை, ஓ.எல். எக்ஸாம் எடுக்கிறதுக்கு அப்ளிக்கேஷன் போட்டிருக்கிறா. எல்லாரும் பிரைவேட் பள்ளிக்கூடம் எண்டால் ஏதோ வெளிநாட்டில போய் ரெயினிங் எடுத்திட்டு வந்தவைதான் படிப்பிக்கினம் எண்டு நினைக்கிறம். ஆனால் உண்மை அப்பிடியில்லை. ஊரில ஏ.எல். எடுத்திட்டு இருக்கிறவையைப் பிடிச்சுக்கொண்டு வந்துதான் படிப்பிக்கினமாம். அப்பிடி வாறவைக்கு அறிவும், அனுபவமும் அவ்வளவு தரமா இருக்கிறேலை. அப்பிடியானவையை எக்ஸாம் அப்ளிக்கேசனை நிரப்பவிட்டால் குளறுபடி வரத்தானே செய்யும்? அதால அந்தப்பிள்ளைக்கு அட்மிசன் கார்ட் வரேலை. பிள்ளையும், பெற்றோரும் போய் அந்தப் பிரைவேட் பள்ளிக்கூடத்தில கேட்க, 'நாங்கள் எல்லாம் வடிவா நிரப்பி அனுப்பினம். போஸ்ட் ஒப்பீஸில அட்மிசன் கார்ட் இருக்கும். அங்க போய்ப்பாருங்கோ' எண்டிருக்கினம். இவையும் போய் போஸ்ட் ஒப்பீஸில பார்த்தால், அங்கையும் வரேலை.

பிறகு வலயக் கல்வித்திணைக்களத்தோட ஏதோ ஒரு வகையில தொடர்பு கொள்ள, அவை எக்ஸாம் டிப்பார்ட்மெண்டுக்கு கோல் பண்ணியிருக்கினம். 'அந்தப் பிள்ளையின்ர அப்ளிக்கேசன் நிரப்பினது பிழை. அதால ரிஜெக்ட் பண்ணிட்டம்' எண்டு சொல்லுப்பட்டிருக்கு. பிறகு வலயக்காரர் சரியான விவரங்களைக் குடுத்து, கடைசிநேரத்தில ஈமெயில்ல ஒருமாதிரி அட்மிசன் கார்ட்டை எடுத்துக் குடுத்திருக்கினம். அப்பிடி வலயக் கல்வித் திணைக்களம் அக்கறையாச் செயற்பட்டிருக்காட்டி, அந்தப்பிள்ளை ஓ.எல். எக்ஸாம் எடுக்காமல் விடவேண்டியதுதான். உண்மையில இதை அப்ளிக்கேசன் சரியா நிரப்பி அனுப்பாத பிரைவேட் பள்ளிக்கூடம் தான் , எக்ஸாம் டிப்பார்ட்மெண்டோட தொடர்புகொண்டு செய்து குடுத்திருக்கவேணும். ஆனால் அவைக்கு அதில அக்கறையில்லை. தங்கட காசு வந்தால் சரி அவைக்கு. ஒவ்வொரு எக்ஸாமும் பிள்ளையளுக்கு எவ்வளவு முக்கியமானது எண்டு அவைக்குத் தெரியேலை. இனியாவது அவை கொஞ்சம் தரமான ஆக்களை எடுத்து, சரியான கல்வியைக் குடுக்கிறதோட, பிள்ளையளின்ர நலனிலையும் கொஞ்சம் அக்கறை எடுக்கோணும்.



- பட்சி

# பெரும்பான்மையை அரசாங்கம் இழக்கும்

## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 29**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குக் கஷ்டப்படுவார். அரசாங்கத்திலிருந்து பலர் விரைவில் எதிர்க்கட்சிக்கு வரவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.**

ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: அரசுடன் எமது கட்சியைச் சேர்ந்த சிலர் இணைந்துள்ளனர் அது சரி யான முடிவல்ல. எங்கள் பக்கமிருந்து நால்வர் அரசின் பக்கம் சென்றுள்ளார்கள். அங்கிருந்த 50 பேர் எதிர்க் கட்சியில் அமர்ந்துள்ளனர். ஒப்பீட்டளவில் பார்க்கும்போது அரசுதான் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குக் கஷ்டப்படுவார். எமது கட்சியிலிருந்து அரசுடன் இணைவதைவிட அரசில் இருந்து பலர் விரைவில் எதிர்க்கட்சிக்கு வருவர். ரணில் அன்று ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைமைத்துவப் பதவியை சஜித்துக்கு வழங்கி இருந்தால், ஐக்கிய தேசியக் கட்சி எப்போதோ ஆட்சியைப் பிடித்திருக்கும்- என்றார். (ச-22)

# இன்றைய நாள் (ராசிபலன்)




**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.


**இடபம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக் கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. வீட்டில் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.


**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.


**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.


**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.


**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.


**தனுசு:** மகிழ்ச்சியான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.


**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்ப தில் அவசரம் வேண்டாம். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு சற்று கவலை தரும்.


**கும்பம்:** இன்று நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வது ஆறுதல் தரும்.


**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

# துப்பாக்கிச்சூட்டில் நபரொருவர் பலி!



கொழும்பு, மே 29
**கேகாலை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். 47 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.**

உறவினரின் வீட்டுக்குச் சென்று மனைவியுடன் வீடு திரும்பும்போது ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாதவர்களால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. மனைவிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் சாவடைந்த நபர் போதைப்பொருள் விற்பனை வழக்கொன்றில் சிறையிடப்பட்டு விடுதலையானவர் என்றும் ஆரம்பகட்ட விசாரணையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-22)

# அலவாங்கால் தாக்கி பெண் படுகொலை

கொழும்பு, மே 29
இளம் குடும்பப் பெண் ஒருவர் அலவாங்கால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வத்தளையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் கணவனே மதுபோதையில் இந்த வெறியாட்டத்தைப் புரிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அரச மருத்துவமனையில் தாதியாகப் பணிபுரியும் மூன்று குழந்தைகளின் தாயான 28 வயதுடையவரே உயிரிழந்துள்ளார். சந்தேகநபரான கணவனை கைதுசெய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

# சாதாரணதரப் பரீட்சையின் மீள் மதிப்பீடு வெளியானது

கொழும்பு, மே 29
2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீள் மதிப்பீட்டுப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரண தரப் பரீட்சையின் மீள் மதிப்பீட்டுக்கு 80 ஆயிரத்து 272 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீள் மதிப்பீட்டுப் பெறுபேறுகள் தொடர்பாக மேலதிக விசாரணைகளுக்கு, பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைகள் பரீட்சை அமைப்பு மற்றும் பெறுபேறு கிளையை தொடர்பு கொள்ள முடியும் என்று அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

# தினேஷ் ஷாப்டரின் மரணம்: மீளச் சூடுபிடிக்கும் விசாரணை

கொழும்பு, மே 29
ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகளுக்கு அவரது தாயாரின் மரபணு கோரப்பட்டுள்ளது.

தாயாரின் இரத்த மாதிரிகளை அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கைகளைக் கோருமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

அவரது தாயார் தற்போது வெளிநாட்டில் இருப்பதால் ரத்த மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் உயிரிழப்புத் தொடர்பான இரண்டாவது பிரேத பரிசோதனை நேற்றுமுன்தினம் கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் நடைபெற்றது.

நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் தடயவியல் மருத்துவப் பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையிலான ஐவர் அடங்கிய நிபுணர் குழுவால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கை எதிர்வரும் 20ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-இ)

# கிழக்கு மாகாணத்துக்கு விரைவில் விமானசேவை

கொழும்பு, மே 29
கிழக்கு மாகாணத்தில் செயற்படாதுள்ள இரண்டு விமான நிலையங்களை செயற்படுத்துவது குறித்து புதிதாக கடமையேற்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கவனம் செலுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விமான சேவையை உடனடியாக ஆரம்பிப்பது குறித்து விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் இரண்டு விமான நிலையங்கள் செயற்படாதுள்ளமை தொடர்பில் சுட்டிக்காட்டினார். இதையடுத்தே ஜூலை மாதத்தில் இருந்து விமான சேவையை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மடியில் கனம்; முடிவில் பயம்!

“எந்தவொரு விசாரணையும் நடைபெறாத நிலையில், 'இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே' என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ள கருத்தை ஏற்கமுடியாது” என்று கண்டித்திருக்கின்றார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க. ஜஸ்ரின் ட்ரூடோவின் கருத்து முகாந்திரம் அற்றது என்பதுடன், அவர் இந்தக் கருத்தை எவ்வாறு சொல்லலாம்? என்றும் கேள்வியெழுப்பியிருக்கின்றார் சந்திரிகா.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போதும் அதற்கு முன்னரும்கூட இனப்படுகொலைகள் இடம்பெற்றன. இலங்கை அரச படைகள் அத்தகைய இழிசெயல்களைச் செய்தன என்ற குற்றச்சாட்டுக்கள் கடந்த பல தசாப்தங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தன் மீதான போர்க்குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை விடுவிக்கும் திராணியும் வல்லமையும் இலங்கை அரசாங்கத்திடம் இல்லவேயில்லை. இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெறவில்லை. வேண்டுமானால்விசாரித்துக்கொள்ளுங்கள் என்று துணிந்துகூறவோ அல்லது எதிர்த்து நிற்கவோ இலங்கை அரசாங்கத்துக்குத் துணிவில்லை. மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருக்கும் தானே. இலங்கை அரசாங்கத்தின் பின்னடிப்பும் பயமும் 'உள்ளகப்பொறிமுறை' என்பதான கதைகளும் அவகாசக்கோரல்களும் இழுத்தடிப்புக்களும் கொழும்பின் போர்க்குற்றத்தையே அப்பட்டமாக்குகின்றன.

எல்லாவற்றையும்விட, இறுதிப்போரின்போது பல ஆயிரம் ஈழத்தமிழர்கள் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்தனர். அவர்களுக்கு கனடாவே அடைக்கலம் கொடுத்தது. கனடாவில் ஈழத்தமிழர்கள் வழங்கிய ஒவ்வொரு வாக்குமூலமும் போர்க்குற்றங்களைப் பறைசாற்றுவதற்கான ஆதாரங்கள் தான். ஆதலால், கனேடியப் பிரதமர் ட்ரூடோ, விசாரணைகள் இல்லாமல் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்று கொள்ளமுடியாது. அத்துடன், எடுத்தோம் கவிழ்த்தோம் என்று தன் நிலைப்பாட்டை அவர் தெரிவிக்கவுமில்லை. இறுதிப்போர் முடிவுக்கு வந்தபின்னர், நீண்ட அவதானிப்பையும் நூற்றுக்கணக்கான ஆதாரங்களையும் சேகரித்த பின்னர், கடந்த வருடம்தான் 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே' என்ற முடிவுக்கு கனடா அரசாங்கம் கொள்கையளவில் வந்தது. ஆதலால், சந்திரிகா கூறுவது போல், ஆதாரமற்ற கருத்தென்றோ அல்லது விசாரணைகள் அற்ற தீர்ப்பென்றோ ட்ரூடோவின் நிலைப்பாட்டை – கருத்தை எடுத்துக்கொள்ளமுடியாது.

இலங்கையின் ஜனாதிபதியாக சந்திரிகா செயற்பட்ட காலத்தில்தான் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் படுகொலை, நாகர்கோவில் பாடசாலைப் படுகொலை உள்ளிட்ட பல்வேறுபட்ட தாக்குதல்கள் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டன. இலங்கை வான்படையின் வெறியாட்டத்தில் கொல்லப்பட்டோருக்கான நீதிகோரி இன்றளவும் இறந்தோரின் உறவுகள் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டேதான் வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு என்ன பதில் கிடைத்திருக்கின்றது? நவாலி சென். பீற்றர்ஸ் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காகவும் அவர்களின் குடும்பத்தினருக்காகவும் ஒரு ஜனாதிபதியாகவும், பொறுப்புவாய்ந்த தலைவராகவும் என்ன பதிலை வழங்க சந்திரிகாவால் முடிந்தது?


உதயன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் நவாலி சென்.பீற்றர்ஸ்படுகொலைச்சம்பவத்தை கேள்விப்பட்டதும் தான் தலையில் அடித்துக்கொண்டதாகக் கூறிய சந்திரிகா இப்போது பல்டி அடித்து தான் ஒரு பாரம்பரிய சிங்கள அரசியல்வாதியென்பதை நிரூபித்துள்ளார். அவ்வளவே!

போர்க்குற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோருவதும், அவர்களின் காயங்களைக் குணப்படுத்துவதும் சர்வதேசத்தின் பிரதான கடமை. அந்தக் கடமையை கனடா சரிவர நிறைவேற்றியிருக்கின்றது. 'கனடா குறிப்பிடுவது தவறு. இலங்கையில்போர்க்குற்றங்கள்இடம்பெறவில்லை' என்றால், ஈழத்தமிழர்கள் கோருகின்ற சர்வதேச விசாரணையொன்றுக்குச் செல்வதன் மூலமோ அல்லது சர்வதேசப் பிரதிநிதிகளைக் கொண்ட விசாரணையை மேற்கொள்வதன் மூலமோ மேற்படி குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கை அரசாங்கம் தன்னை விடுவித்துக்கொள்ள முடியுமே! போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேசப் பொறிமுறையை நாடுவதற்கு மட்டுமல்ல அதைப்பற்றிச் சிந்திக்கக்கூட இலங்கை அரசாங்கம் தயாரில்லையே. அது ஏன்?

நாளொரு நல்வார்த்தை

தீய பழக்கங்களை
தகர்த்தெறிவதை விட
தடுப்பதே எளிதானது

– பெஞ்சமின் பிராங்க்ளின்



இலங்கைக்கு

# நாணய நிதியத்தை விடவும் இந்தியா கூடுதலான உதவி

## ஜெய்சங்கர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 29**

**சர்வதேச நாணய நிதியத்தை விட இந்தியா, இலங்கைக்கு அதிகளவு உதவிகளை வழங்கியுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

இந்திய பல்கலைக்கழகமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய பெருங்கடலிலுள்ள தீவுகள், வளைகுடா நாடுகள், தென்கிழக்காசியாவிலுள்ள நாடுகளை உள்ளடக்கிய விஸ்தரிக்கப்பட்ட அயலை உருவாக்குவது குறித்து பிரதமர் மோடி அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. அண்டை நாடுகளில் இந்தியா பற்றிய பார்வையும் மாற்றமடைந்துள்ளது. இலங்கையில் கடந்த வருடத்தில் இடம்பெற்ற விடயங்களைவிட வேறு எதுவும் வியத்தகு விதத்தில் இதனை வெளிப்படுத்தமுடியாது.

இலங்கை கடந்த வருடம் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் நாங்கள் உதவினோம். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவியதைவிட நாங்கள் அந்த நாட்டுக்கு அதிகளவு உதவியுள்ளோம்.

உங்களில் எவரேனும் இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் மேற்கொண்டிருந்தால் இந்த உதவியால் இந்தியா குறித்து மாற்றமடைந்துள்ள கருத்தை அவதானிக்கமுடியும்.

நாங்கள் இந்த விஸ்தரிக்கப்பட்ட அயல் எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பது குறித்தும் ஆராய்கின்றோம் - என்றார். (ம)

# சா/த பரீட்சைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, மே 29

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

2020ஆம் ஆண்டு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து, அந்த ஆண்டிலிருந்து தேசிய பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்த முடியாத நிலைமை காணப்படுகிறது. தற்போது ஒவ்வொரு ஆண்டுக்குரிய பரீட்சைகளும் கட்டம் கட்டமாக நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், கடந்த ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

அதற்கமைய இந்தமுறை நாடளாவிய ரீதியில் 4 இலட்சத்து 72 ஆயிரத்து 553 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதற்காக 3 ஆயிரத்து 568 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

நாளை 30.05.2023 செவ்வாய்க்கிழமை வைகாசி 16

சுபநேரம் : 10.22- 11.52
ராகுகாலம் : 02.52 - 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் மீண்டும் புதுவகை கொரோனா

## அச்சத்தில் உலக நாடுகள்

பீஜிங், மே 29
சீனாவில் வீரியம்மிக்க புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருவதாகவும் வாரத்துக்கு ஆற ரைக் கோடிக்கும் அதிகமானோர் இந்தவகை தொற்றால் பாதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சீனாவின் மூத்த சுகாதார ஆலோசகரின் அறிக்கையை மேற்கோள் காட்டி, சீன ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

கடந்த 2019 ஆம் ஆண்டு பரவிய கொரோனாவின் தாக்கம் இன்னமும் குறையவில்லை. இந்த நிலையில், சீனாவில் வீரியம்மிக்க புதுவகை கொரோனா வைரஸ் பரவி வருவதாகவும் அதனை எதிர்கொள்ள புதிய தடுப்பூசியுடன் சீனா தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உக்ரைனுடனான மோதல் பல ஆண்டுகள் நீடிக்கும்!

## ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, மே 29
உக்ரைனுடனான மோதல் தற்போதைக்கு முடிவுக்கு வராது என்றும் அது பல ஆண்டுகள் நீடிக்கும் என்றும் ரஷ்யா அறிவித்துள்ளது. இது தொடர்பில் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் டிமிட்டி மெத்வதேவ் தெரிவித்ததாவது:
உக்ரைனுடனான மோதலை ரஷ்யா விரும்பவில்லை. மாறாக உக்ரைன் தான் இந்தப் போரை ஏற்படுத்தியது. உக்ரைனின் நடவடிக்கைகள் தான் இந்தப்போர் ஏற்படுவதற்குக் காரணமாகின. பிராந்தியத்தில் ரஷ்யாவின் இருப்பை உறுதிப்படுத்தாத சமரசத்தை ரஷ்யா விரும்பவில்லை. எனவே உக்ரைனுடனான போர் பல ஆண்டுகள் நீடிக்கலாம். போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் மீண்டும் போர் வெடிக்கலாம்- என்றார்.
உக்ரைனின் டினிரிப்போ நகர் மீது கடந்த மூன்று தினங்களாக ரஷ்யா மூர்க்கமான தாக்குதலை நடத்தி வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (ம)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 07 . 07 . 1967

மறைவு 29 . 04 . 2023

கடந்த (29.04.2023) சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் அருளானந்தம் ஆனந்தகுமார்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


டச்சுறோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

-குடும்பத்தினர்-

(cs/50592) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"



குவலயத்தில் 11 . 07 . 1951

குகமயத்தில் 09 . 06 . 2022

அமரர்

### திரு.தர்மலிங்கம் யோகேஸ்வரன்

(ஓய்வுநிலை ஆசிரியர், செயலர் - கொக்குவில்,
மாத்தனை கந்தசாமி ஆலய பரிபாலனசபை)


திதி: பூர்வபக்க தசமி (29.05.2023)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

29, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, சகோதரன்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 04 . 1948

மறைவு 27 . 05 . 2023

### இராமலிங்கம் இரத்தினசிங்கம்

சிங்ககிரி சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், மெல்போர்ன் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இரத்தினசிங்கம் அவர்கள் கடந்த (27.05.2023) சனிக்கிழமை சங்கத்தானை முருகனின் திருவடியைச் சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், நாகம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்பு கணவரும், சுவேசினி, சுதர்சினி, ஜெயலோஜினி,சசிந்தினி, ரேணுகா, ஆகியோரின் ஆருயிர் தந்தையும், விஜயகுமார், இராஜ்குமார், குமரேஸ்வரன், செந்தில்வேல், ரமேஷ்குமார் ஆகியோரின் மாமனாரும், விதுஷ், விதுஜா, விதுஷிகா, அபிலாஷினி, அரவிந், காவியன், கருனியா, ஜீவிகன், டீபிகா, சமுத்திரா, துர்க்கா, பைரவி, மோனிஷா, சமீரா, பிரணவி ஆகியோரின் ஆசை தாத்தாவும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, அன்[illegible]லட்சுமி, மற்றும் விக்கிரமசிங்கம் ஆகியோரின் சகோ[illegible]னும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், சின்னத்தம்பி மற்றும் உருத்திராதேவி, தங்கமுத்து மார்க்கண்டு, மேகநாதன், காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை திருநாவுக்கரசு, கேதீஸ்வரன், மற்றும் கெங்காதேவி, திலகவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
இவரின் பூதவுடல் பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (30.05.2023) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

T:P - 077 087 5057, 077 907 3805

(CR 39926) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இந்திய நாடாளுமன்றம்

# செங்கோல் நிறுவப்பட்டு திறந்துவைத்தார் மோடி

புதுடில்லி, மே 29

தலைநகர் டில்லியில் அதிநவீன வசதிகளுடன் சுமார் ரூ.1000 கோடி செலவில் கட்டடப்பட்ட புதிய நாடாளுமன்ற கட்டடத்தை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் ஆட்சி மாற்றத்தின் அடையாளமாக - இந்தியாவின் விடுதலைச் சின்னமாக பிரித்தானி யரிடமிருந்து நேரு பெற்றுக் கொண்ட தமிழக செங்கோலும் கட்டடத்தில் நிறுவப்பட்டது.

தற்போது செயற்பட்டு வரும் நாடாளுமன்றக் கட்டடம் 1927ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்தப் பழமையான கட்டடத்தின் பாது காப்புக் குறைபாடு, இடவசதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு புதிய கட்டடம் கட்டவேண்டும் எனக் கோரிக்கைகள் நீண்ட கால மாக முன்வைக்கப்பட்டு வந்தன.

இதையடுத்து, புதிய கட்டடம் கட்டுவதற்கான திட்டத்துக்கு பிரத மர் மோடி 2020ஆம் ஆண்டு டிசெம்பரில் அடிக்கல் நடப் பட்டு, 970 கோடி ரூபாய் செலவில் நான்கு மாடிகொண்ட முக்கோண வடிவிலான கட்டடமாக 'சென்ட்ரல் விஸ்டா' என்ற பெய ரில் புதிய நாடாளுமன்றம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார்.

இந்தநிலையில் "மரபை மீறி, நாடாளுமன்றத் திறப்பு விழா வுக்கு குடியரசுத் தலைவரை அழைக்காமல், பிரதமர் மோடியே திறந்துவைப்பது அவமானம்" என எதிர்க்கட்சிகள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

(ச-இ)


## INVITATION FOR BID (2023/02)
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Supply of Goods in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Interested bidders may obtain further information from address given below in 4 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212222278, fax-0212229971) 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
5. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 HospitalRoad, Jaffna on commencing at 10.30 A.M on the date mentioned in the table.
7. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| | | |
|---|---|---|
| **CATEGORY I** | **Documents Issuing** | **From 30.05.2023 until 11 .06.2023** |
| | **Pre- bid Conference** | **At 10.30 A.M on 05.06.2023** |
| | **Closing & Opening of Bids** | **At 10.30 A.M on 12.06.2023** |

| Bid ID | Description of Work | UNIT | Qty | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| NP/RDHS/PSSP/OE/ 2023/02 | Fabrication and Supplying 335mm wide,2650mm height timber cupboard with aluminium Door | Lm | 51 | 2,000.00 | 66,000.00 | Till 08.10.2023 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service,
Jaffna.

(cr 39908) (N-1)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் பின்வரும் விடயங்களை கலந்துரையாடுவதற்காக 11.06.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து சங்க அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள்:
- 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல்
- விடுதி நிதி தொடர்பான கலந்துரையாடல்
- அங்கத்துவக்கட்டண அதிகரிப்பு தொடர்பான கலந்துரையாடல்
- பழைய மாணவர் சங்க இலட்சினை அறிமுகப்படுத்தல்.

கணக்காய்வு அறிக்கையினை 30.05.2023 முதல் எமது www.jhcobajaffna.com இணையத்தளத்தில் உள்ள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

29.05.2023

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பரிசாரகராக கடமையாற்றும் மு.றஞ்சிதா அவர்களின் அன்புத் தந்தையார்

### இளையவன் பிள்ளையான்

அவர்கள் நேற்று (28.05.2023 ) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**சித்த போதனா வைத்தியசாலை, கைதடி.**

(CR 39925)A-1

## கேள்வி அறிவித்தல்
## பாவனையிலிருந்த வாகனங்கள் மற்றும் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் விற்பனை

| | |
|---|---|
| கேள்வி இலக்கம் | DV/2023 |
| கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கும் இறுதி திகதி | மு.ப. 11.30 - 20 ஆனி 2023 |

பிரதம செயலாளர் - வடக்கு மாகாணம் அவர்களால் வடமாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள். திணைக்களங்களின் பாவனையிலிருந்த வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விதாரர்களிற்கு தேவையான மேலதிக விபரங்களான வாகனங்களினை பார்வையிடுதல். கேள்விதாரருக்குரிய அடிப்படைத் தகைமைகள், கேள்வி ஆவணங்கள் விநியோகம், சமர்ப்பித்தல் மற்றும் முடிவுறுத்தல் போன்றவற்றினை 2023.05.26 ம் திகதிய Daily News ஆங்கிலப்பத்திரிகையின் 22 ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் வடமாகாண சபையின் இணையத்தளத்திலும் (https./np.gov.lk) பார்வையிட முடியும்.

தலைவர்,
பிரதம செயலாளர் பெறுகைக்குழு,
பிரதம செயலாளர் செயலகம் - வ.மா,
மாகாணசபை வளாகம்,
A.9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.

(cr.39914) (N-1)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கனகரட்ணம் (வெற்றிலைகடை)

தோற்றம் : 02.01.1951 மறைவு : 28.05.2023



கயந்தப்பை வித்தகபுரம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை கனகரட்ணம் அவர்கள் நேற்று (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பரஞ்சோதியின் அன்பு மருமகனும், புட்கலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற புஸ்பலீலாவின் அன்புச் சகோதரனும், லோகினி (கனடா), அமரர் அமிர்தினி, அஜந்தினி (உதவி அதிபர்- யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்), நிஷாந்தினி (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), பிரியந்தினி (ஜேர்மனி), கோகுலன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சக்திநேசன் (கனடா), யதீஸ்குமார் (M.A வலிகாமம் கல்வி வலயம்) மோகனதாஸ் விஜயதனுஸன் (ஜேர்மன்), சிதம்பரவானதி (Operation Analyst), ஆகியோரின் அன்பு மாமனாரும், பூஜா, யதுநாத், அனுநாத், ஜஸ்வினி, அட்சயன், கர்ஷினி, அதிசன், ஆருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2023) திங்கட்கிழமை மதியம் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0771395417
0777849923, 0778548154

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

### உலர் உணவு பொருள்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்களுக்கான பெறுகை 2023 இரண்டாம் அரையாண்டு

தலைவர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள பின்வரும் அலுவலகங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் தொற்றுநீக்கிப் பொருட்களை 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்கு வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| Details | | Safe House Kilinochchi | State Receiving Home Kaithady | Certified School Atchuvely |
|---|---|---|---|---|
| Reference No. | | NP/30/02/02/Diet &Con/SH-Kili/ 2023 | NP/30/02/02/Diet & Con /SRH-Kai/ | NP/30/02/02/Diet & Con/CS-Achu/ 2023 |
| Non Refundable Fee | | Rs. 3000/- | Rs. 3000/- | Rs. 3000/- |
| S. | Type of Food | Amount of Bid Security (Rs) | | |
| 1 | Fresh Vegetables and Fruits | 20,000 | 10,000 | 20,000 |
| 2 | Meat, Eggs and Sea Foods | 14,000 | 8,000 | 14,000 |
| 3 | Dry Foods Packets, Tins and | 20,000 | 10,000 | 20,000 |
| 4 | Bakery Products | 1,000 | ............... | 1,000 |
| 5 | Consumable Items | 20,000 | 10,000 | 20,000 |
| | If quoted all category | 75,000 | 38,000 | 75,000 |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   * கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   *.அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர்**, வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் **கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை** ,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **ஆணையாளர்**, வட மாகாண நன்னடத்தை **பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை**,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் 29.05.2023 ஆம் திகதி தொடக்கம் 12.06.2023 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் மேற்குறிப்பிடப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 13.06.2023 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக **ஆணையாளர்**, வட மாகாண நன்னடத்தை **பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை**,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். முன் ஆயத்த பெறுகைக் கூட்டம் 09.06.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , **மீனாட்சிஅம்மன் வீதி, பண்ணை**,யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ. குருபரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா.**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021 205 7102 தொலைநகல்:- 021 205 7103**

*(CR/39910)AH-1*

# பைபிள் வைத்திருந்த குற்றம் பெற்றோர், 2 வயதுக் குழந்தைக்கு வடகொரியாவில் ஆயுள்தண்டனை

**பியாங்யாங், மே 29**

பைபிள் வைத்திருந்ததாக கைதுசெய்யப்பட்ட தம்பதியருடன் அவர்களின் 2 வயதுக் குழந்தைக்கும் வடகொரியாவால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மதச்சுதந்திரம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டு ள்ளதாவது:

வடகொரியாவில் பிறமதங்களைச் சேர்ந்தவர்களுடன் 70 ஆயிரம் கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

வடகொரியாவில் சர்வாதிகாரப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படு கின்றன. வடகொரியாவில் பல்வேறு மதத்தினர் இருந்தாலும் வடகொரியா அரசு நாத்திக அரசாக உள்ளது. வடகொரிய அரசு எந்த மதத்தையும் ஊக்குவிப்பதில்லை.

இந்த நிலையில் பைபிள் வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்ட பெற்றோருடன் அவர்களின் 2 வயது குழந்தைக்கும் வடகொரியா அரசால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள் ளமை தெரியவந்துள்ளது.

அந்தக் குழந்தை உட்பட மொத்தக் குடும்பத்தினரும் 2009 இல் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்- என்றுள்ளது. இதேவேளை- வடகொரியாவில் நீண்ட காலமாக மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என கடந்த டிசெம்பர் மாதம் ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# வாழ்நாள் சாதனையாளர் விருது நடிகர் கமலுக்கு



**சென்னை, மே 29**

'உலக நாயகன்' கமல்ஹாசனுக்கு அபுதாபியில் நடைபெற்ற சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

'களத்தூர் கண்ணாம்மா'வில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான கமல்ஹாசன், தமிழ்த் திரையுலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, 60 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் மனம் கவர்ந்தவராக விளங்குகிறார். நடிகர் என்ற அடையாளத்தைத் தாண்டி, இயக்குநர், திரைக்கதை ஆசிரியர், பாடலாசிரியர், பாடகர் எனப் பன்முக திறமைகளுடன் வலம் வருகிறார். தான் ஒரு பன்முகத்திறமை கொண்டவர் என்பதை பலமுறை நிரூபித்து இருக்கிறார் கமல்ஹாசன். இந்தநிலையில் கமல்ஹாசனின் திரைப்பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக இந்திய திரைத்துறையின் வாழ்நாள் சாதனையாளர் விருது அவருக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் வழங்கி வைத்தார். (ச-இ)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 • 07 • 1974



உதிர்வு 20 • 05 • 2013

### அமரர் மதியாபரணம் மதிவதனன்

(கரைதுறைப் பற்று பிரதேச சபை)

ஆண்டுகள் பத்து ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும்
பிறப்பவர் எல்லாம் இறப்பவர்
எனினும் சிறப்புயர்வுற்றோர் - என்றும்
சிந்தையில் இருப்பார்
உன் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
இன்று வேண்டித் துதித்தே இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

37/37, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மகள், அக்கா,
அத்தான், மருமக்கள்மார்.

(s.50590) (N-)

உ
சிவமயம்

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

"மேன்மைகொள் சைவநீதி,
விளங்குக உலகமெல்லாம்"

### 2023 ஆம் ஆண்டு உயர் திருவிழாவிற்கான ஒலி, ஒளி அமைப்பு சேவைக்கான கூறுவிலை கோருதல்

கோவிலின் 2023 ஆம் ஆண்டு உயர்திருவிழாவிற்கான ஒலி, ஒளி அமைப்பு சேவைக்கான பொருட்கள், கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோவிலின் காரியாலயத்தில் கூறுவிலைப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி 2023-06-06 ஆம் திகதிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் மாலை 5.00 மணிக்கு முன்னர் இட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கடிதம் மூலம் அனுப்புபவர்கள் பதிவு அஞ்சல் மூலம் **செயலாளர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் ஒலி, ஒளி அமைப்புக்கான கூறுவிலை 2023 என காட்டப்பட வேண்டும்.

**ந. மோகனரூபன்**
**செயலாளர்**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**அறங்காவலர் சபை, நயினாதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி
## டேவிட் றோஸ்மலர்
## (ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணம் பிடாரிகோவில் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட டேவிட் றோஸ்மலர் (ஓய்வுபெற்ற ஆசிரியை) நேற்றுமுன்தினம் (27.05.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை மதலேனா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராயப்பு அருளம்மா தம்பதியரின் மருமகளும், இராயப்பு டேவிட் (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பீற்றர், மேரிமலர் மற்றும் செபமாலைமலர், கீதபொன்கலன் ஆகியோரின் சகோதரியும், ஜனகன் (கனடா), அகிலன் (தொழினுட்ப உத்தியோகத்தர், நகரசபை - சாவகச்சேரி), ஜனார்த்தனன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபோதினி (கனடா), காயத்திரி (பிரதிமுகாமையாளர் - மக்கள் வங்கி), ஜவனியா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சேயோன், மேர்வின், ஆரன், காவியா, சஹானா, ஷாரா, றியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (30.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று, இறுதி ஆராதனைக்காக ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு இறுதிச்சடங்குகள் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

"பூபாளம்"
பிடாரி கோவில் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
077 674 0265, 070 674 0265

### ஆரோக்கிய சமூகம் உருவாக
# பாரம்பரிய உணவுகளை சந்ததிக்கு பழக்குங்கள்!
### மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முன்னோரின் பாரம்பரிய உணவுமுறைகள் கைநழுவிச் செல்லும் இவ்வேளையில் அதனை மீண்டும் எதிர்காலச் சந்ததியினருக்கு கொண்டுசென்று சேர்க்கவேண்டும். அதற்கு பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் பாரம்பரிய உணவுப் பண்டங்களை விற்பனை செய்யவேண்டும். இதனூடாக எதிர்காலச் சந்ததியினரிடையே மறைந்துபோகும் எமது பாரம்பரிய மரபுசார் உணவுமுறைகளை மீள வெளிக்கொணர்ந்து ஆரோக்கிய மான சந்ததியை உருவாக்கமுடியும் என மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா எயிட் நிதியுதவியுடன் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெண்களின் மரபுசார் உணவுக் கொண்டாட்டம் கடந்த சனிக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தங்கள் காலில் நிற்க வேண்டும் என்ற தூரநோக்குடன் பெண்கள் சுயதொழிலில் ஈடுபடவேண்டும். எங்கள் மனதை ஆரோக்கியமாக வைத்திருக்க உடல் ஆரோக்கியம் பேணவேண்டும். உணவே மருந்து என்ற காலம் மாறி இப்போது மருந்தே உணவு என்ற நிலையாக மாற்றம் அடைந்துள்ளது. நாற்பது வயது கடந்து விட்டால் கட்டாயம் எமது உடலை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்பது மருத்துவர்களின் ஆலோசனையாக உள்ளது. முற்காலத்தில் இந்தப் பரிசோதனைகள் எங்கு மேற்கொள்ளப்பட்டன. ஏனென்றால் இன்றைய உணவுப் பழக்கமே இந்த நிலைக்கு எம்மைத் தள்ளியுள்ளது.

எமது பகுதியில் உற்பத்தி செய்யப்படும் உடலுக்குத் தீங்கு விளைவிக்காத உணவு மற்றும் பானங்களில் வெளிநாட்டவர்கள் அக்கறை செலுத்துகின்றனர். ஆனால், நாம் அங்கிருந்து வரும் மென்பானங்கள், உடனடி உணவுகள் உள்ளிட்ட உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவுகளுக்கு அடிமையாகின்றோம். இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை நாம் விட்டுவிட்டு காசைக் கொடுத்து நோயை வாங்கும் சமூகமாக மாறுகின்றோம்.

இந்த உணவுக் கொண்டாட்டம் காலத்துக்கேற்ற வகையில் நடத்தப்படுகின்றமை சிறப்புரிக்குரியது. இவ்வாறான நிகழ்வுகளினுடாக விழிப்புணர்வை எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். எமது முன்னோரின் பாரம்பரிய உணவு முறைகள் கைநழுவிச் செல்லுகின்ற நிலையில், அவற்றை மீளக் கட்டியெழுப்பி எதிர்காலச் சந்ததியினருக்கு கொண்டுசென்று சேர்க்க வேண்டும் - என்றார். (ச-60)

## பிறப்புச் சான்றிதழ்கள் விரைவில் டிஜிற்றலில்

பிறப்புச் சான்றிதழை, டிஜிற்றல் வடிவில் வெளியிடுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். புத்தளம் மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்கள் வழங்கும் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புதிய டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ்களில் ஒருவரின் இனம் மற்றும் மத அடையாளங்கள் இடம்பெறாது. இலங்கையர் என்றே இடம் பெறுவதுடன், சர்வதேச தரங்களுக்கு அமைவாக போலி ஆவணங்களைத் தயாரிப்பைத் தடுக்கும் வகையில் அந்தச் சான்றிதழ் அமையப் பெறும் - என்றார். (ச-இ)




## வீதி விபத்து விழிப்புணர்வு

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சி - தருமபுரம் மத்திய கல்லூரி மாணவர்களிடத்தில், போக்குவரத்து விதிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. தருமபுரம் போக்குவரத்துப் பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி பிக் பாஷ் லீக் (ரி.பி.பி.எல்.)

# பரபரப்புக்கு பஞ்சமில்லாத நான்காம் நாள் ஆட்டங்கள்!




யாழ்ப்பாணம், மே 29

உதயன் ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்படும் ரி.பி.பி.எல். (T.B.B.L. Thenmaradchi Big Bash League) தொடரின் நான்காவது நாள் ஆட்டங்கள் நேற்று வளர்மதி விளையாட்டுமைதானத்தில்நடைபெற்றன. 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த தொடரில் 10 அணிகள் பங்குபற்றுகின்றன.

நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் கைதடி சுப்பர் அணியும், சாவா ஸ்ரைக்கர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. அதில் கைதடி சுப்பர் அணி 71 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடியகைதடிசுப்பர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில்ஒருவிக்கெட்டை இழந்து149ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சுஜீவன் ஆட்டமிழக் காமல் 56 ஓட்டங்களையும், கௌசி 50 ஓட்டங்களையும், கஜன் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்ரைக்கர் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து78ஓட்டங்களைமட்டுமேபெற்று 71ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக சிவகீதன் 30 ஓட்டங்களையும், தனுசன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். கைதடி சுப்பர் அணி சார்பில் பந்துவீச்சில் தமிழேந்தி 4 விக்கெட்டுக் களையும், கஜன், தயானளன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டம் ஒன்றில் மட்டுவில் பைற்றர்ஸ் அணியும், கைதடிபோரேவர் அணியும் மோதிக் கொண்டன. அதில் மட்டுவில் பைற்றர்ஸ் அணி 26 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக வினோதன் 38 ஓட்டங்களையும், சஜந்தன் 15 ஓட்டங்களையும், துஷிதன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி போரேவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து77ஓட்டங்களைமட்டுமேபெற்று 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக ஜெனிஸ்டன் 30 ஓட்டங்களையும், பானு 15 ஓட்டங்களையும், இலக்கியன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் பைற்றர்ஸ்அணிசார்பாகப்பந்துவீச்சில் மதுசன்4விக்கெட்டுக்களையும், மாதங்கன் 2 விக்கெட்டுக்களையும், துஷிதன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் கைதடி சுப்பர் அணியும், நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. அதில் கைதடி சுப்பர் அணி 37 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடியகைதடிசுப்பர் அணி 9.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. அந்தஅணிசார்பாகசுஜீவன்37ஓட்டங்களையும், ஏ.கே. கஜன்17ஓட்டங்களையும், கஜன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடியநாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும்இழந்து71ஓட்டங்களைமட்டுமேபெற்று37ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக அஜந்தன் 18 ஓட்டங்களையும், நிதுசன்17ஓட்டங்களையும்அதிகபட்சமாகப் பெற்றனர். கைதடி சுப்பர் அணி சார்பில் பந்துவீச்சில் சுஜீவன் 3 விக்கெட்டுக்களையும், தயானளன் மற்றும்கஜன்தலாஇருவிக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் சாவா ஸ்ரைக்கர்ஸ் அணியும், மட்டுவில் பைற்றர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. அதில் மட்டுவில்பைற்றர்ஸ்அணிஒருவிக்கெட்டால்வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. அந்தஅணிசார்பாகசாரங்கன்13ஓட்டங்களையும், கஜீபன் 7 ஓட்டங்களையும், சஜீசன் 7 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் பைற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் மதுசன் மற்றும் நிசாந்த் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மாதங்கன் இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர்ஸ்அணி9.5பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக வாகீசன் 14 ஓட்டங்களையும், துசிதன் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் கைதடி போரேவர் அணியும், நுணாவில்ரொக்கர்ஸ்அணியும் மோதிக் கொண்டன. அதில் நுணாவில் ரொக்கர்ஸ் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி போரேவர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக இலக்கியன் 40 ஓட்டங்களையும், வசி 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். நுணாவில் ரொக்கர்ஸ்அணிசார்பாகப்பந்துவீச்சில் முதல்வன் 3 விக்கெட்டுக்களையும், மதுராஜ் இருவிக்கெட்டுக்களையும், கௌசிகன்ஒருவிக்கெட்டையும்கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் ரொக்கர்ஸ் அணி 8.3 பந்துப் பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அந்தஅணிசார்பாகமலவன்30ஓட்டங்களையும், சஜிராம்24ஓட்டங்களையும், ரைசன்11ஓட்டங்களையும்அதிகபட்சமாகப் பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் சாவா ஸ்ரைக்கர்ஸ்அணியும்,நாவற்குழிபிக்வூற்றர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. அதில் நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சதா 40 ஓட்டங்களையும், அனோ 24 ஓட்டங்களையும், மதுசன் 15 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். நாவற்குழி பிக்வூற்றர்ஸ்அணிசார்பாகபந்துவீச்சில் எட்வின் 3 விக்கெட்டுக்களையும், நிதர்சன் இரு விக்கெட்டுக்களையும், சுமன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடியநாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 9.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக் களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அந்தஅணிசார்பாகசத்தியன்32ஓட்டங்களையும், எட்வின்29ஓட்டங்களையும், நிதர்சன் 15 ஓட்டங் களையும் அதிகபட்சமாகப்பெற்றனர்.

மற்றொரு ஆட்டத்தில் நுணாவில் ரொக்கர்ஸ் அணியும், மட்டுவில் பைற்றர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. அதில் மட்டுவில் பைற்றர்ஸ் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் ரொக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. அந்தஅணிசார்பாகபிரதீபன்23ஓட்டங்களையும், ரைசன்20ஓட்டங்களையும், கௌசிகன்19ஓட்டங்களையும்அதிகபட்சமாகப்பெற்றனர். மட்டுவில்பைற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ரதீஸ் 2 விக்கெட்டுக்களையும், மதுசன் மற்றும் மாதங்கன்ஆகியோர்தலாஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர்ஸ் அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 78 ஓட்டங்களைப்பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக பிரதீபன் 50 ஓட்டங்களையும், கோபிநாத் 15 ஓட்டங்களையும், நிதர்சன் 9 ஓட்டங்களையும்அதிகபட்சமாகப்பெற்றனர்.

(எ)

### பொதுத்தூபி...

வரவேற்கின்றேன். இந்தப் பொதுத் தூபி இன நல்லிணக்கத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக இருக்கும் என்று நம்புகின்றேன். இதனை வைத்து எவரும் அரசியல் செய்யக்கூடாது. அதேவேளை பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்படுவதும் தவிர்க்கப்படவேண்டும்' - என்றார். (அ-ஒ.5,22)

### பருத்தித்துறையில்...

உயிரிழந்த இளைஞனின் வீட்டுக்கு அண்மையாகவுள்ள இன்னொரு வீட்டிலிருந்தே இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது. சடலத்துக்கு அருகில் அந்த வீட்டிலிருந்த இளம் பெண்களின் உள்ளாடைகள் காணப்பட்டன.

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தியாகராசா சந்திரதாஸ் (வயது-33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்கு அண்மையாகவுள்ள 3ஆம் குறுக்குத்தெருவில் உள்ள பிறிதொரு வீட்டிலிருந்தே சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. அந்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தபோதே இளைஞர் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நேற்றுக் காலையில் சடலம் இருப்பதாக அந்த வீட்டாரால் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் சடலத்தை மீட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ஒ.26)

### ஆனையிறவில்...

வீதி விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, ஆழியவளையைச் சேர்ந்த கந்தசாமி கலைரூபன் (வயது - 38) என்ற இளம் குடும்பத் தலைவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

அவர் விசுவமடுவிலிருந்து ஏ - 9 வீதியூடாக ஆழியவளை நோக்கிச்சென்று கொண்டிருந்த போது, பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர் உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்டசமயம், எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் மகன் இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்.

விபத்தைத் தொடர்ந்து டிப்பர் சாரதி கிளிநொச்சி நோக்கிப் பயணித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வாகனத்தை விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார். (அ-ஒ.214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா - ...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்கவுள்ளனர் என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மறுத்துள்ள நிலையிலும், சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. அதன் வெளிப்பாடாகத்தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்க் கட்சிகள் சந்திப்பதற்கு திரைமறைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன் ஏற்பாட்டாளர்களாக இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தினர் செயற்படுகின்றனர்.

தீர்வு விடயம் தொடர்பில் பேசவேண்டுமெனில் இந்தியத் தரப்பினர் இலங்கை அரசுடன் பேச வேண்டும். அதேவேளை தமிழ்க் கட்சிகளும் தீர்வு விடயம் தொடர்பில் பேச வேண்டுமெனில் இலங்கை அரசுடன் பேசவேண்டும். அதைவிடுத்து இந்தியாவும் தமிழ்க் கட்சிகளும் திரைமறைவில் காதல் கொண்டால் அது இலங்கையின் முன்னேற்றத்துக்கு ஆபத்தாக அமையும். இது தொடர்பில் இலங்கை அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (அ-ஓ.22)

## மத...

என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாதம் மற்றும் மதவெறியைப் பரப்புவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார். ஜனாதிபதி ரணில் நாட்டைக் கைப்பற்றியதன் முதன்மையான நோக்கம் வீழ்ந்த நாட்டைக் கட்டியெழுப்புவதே. கடந்த காலங்களில் சிலர் எடுத்த தனிப்பட்ட தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கியதன் காரணமாக இலங்கை மீது ஜப்பானுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதனைப் போக்குவதற்காகவே ஜனாதிபதி ரணிலின் ஜப்பான் விஜயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், நீண்டகாலமாக தேசியத் திட்டத்தைச் செயற்படுத்த எந்தத் தலைவருக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ.இ)

## பாக்கு...

நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தனுஷ்கோடியிலிருந்து தலை மன்னாரை நோக்கி தனது நீச்சல் பயணத்தை ஆரம்பித்த மதுஷிகன் நேற்று பிற்பகல் 3.05 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே உள்ள சுமார் 30 கிலோ மீற்றர் தூரமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். (ஓ.56)

## ஆலயங்கள்...

ஆலயங்களெல்லாம் வருமானம் உழைக்கின்ற வியாபார நிறுவனங்களாகிவிட்டன - இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

ஆறு. திருமுருகன் பிறந்தநாள் அறநிதியச் சபையின் ஏற்பாட்டில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தின் புதிய செயலராகப் பொறுப்பேற்றபோது எனக்குக் கல்வி கற்பித்த பேராசிரியர்கள் பலரும் நேரடியாக வருகை தந்து வாழ்த்துக் கூறியதுடன் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் உட்பட பலரும் தொலைபேசிகளில் வாழ்த்துக் கூறும்போது 'யாழ்ப்பாணம் கவனம்' என்று கூறினர். கடந்த வாரம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் விழாவொன்று இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்வில் நோர்வேயிலிருந்து வருகை தந்த ஒருவர் என்னருகில் அமர்ந்திருந்தார். அவர் நீங்கள் யாழ். மாவட்டச் செயலாளராக வந்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. யாழ்ப்பாணத்தில் நீங்கள் மாவட்டச் செயலாளராக இருந்தால் எங்கேயும் இருக்கலாம் என எனது காதுக்குள் இரகசியமாகக் கூறினார். ஏனெனில் அவ்வளவு விசித்திரமான இடம் எங்கள் யாழ்ப்பாணம்.

யாழ். மண்ணில் வரலாற்றுப் புகழ் பூத்த, பெரும் சைவக் குடிகள் நிறைந்த பகுதிகளில் அமைந்துள்ள பேராலயங்கள் யாவும் நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்டிருக்கின்றன. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள், நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயம் உட்படப் பல ஆலயங்களுக்கும் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்னொரு கோயில் ஆலய பரிபாலன சபையினர் என்னிடம் வந்து நீங்கள் நேரடியாக வருகை தந்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என விடாப்பிடியாக நின்றார்கள். அந்த ஆலயத்தில் இதுவரை சுமார் 15 கிலோ தங்கநகைகள் காணப்படுவதாக அறியக்கிடைத்தது. இவ்வாறு பெரும் சொத்துக்கள் கொண்ட ஆலயங்கள் எமது யாழ். மாவட்டத்தில் காணப்பட்டபோதிலும் இந்த ஆலயங்கள் எமது மக்களுக்கு என்ன செய்கின்றன? முன்னைய காலங்களில் கிராமங்களில் அமைந்துள்ள ஆலயங்களை நல்ல அருளுடைய தெய்வங்கள், பேசும் தெய்வங்கள் என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால், தற்போது ஆலயங்களெல்லாம் வருமானம் உழைக்கின்ற வியாபார நிறுவனங்களாகிவிட்டன.

'நீ கல்லாலான ஒரு விக்கிரகத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றாய். அதற்கு அபிஷேகம் செய்கின்றாய். ஆனால், உயிரோடு உலாவுகின்ற ஆயிரம் சிவலிங்கங்கள் உன்னைச் சுற்றியிருக்கின்றன. அவற்றைப் போசித்துக் கொள்' என உபநிடதத்தில் ஒரு வசனமிருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

யாழ். மாவட்டம் உள்ளார்ந்த ரீதியாக பெரிய வளமுடைய மாவட்டம். இங்கே இல்லை என்று எதுவுமில்லை. ஆனால், எமது மாவட்டத்தின் கிராமங்களிலுள்ள வீதிகளை மூடியிருக்கின்ற பற்றைகளை அகற்றுவதற்கே ஒரு திணைக்களம் வேண்டும் என்பது தான் எமது மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. குறித்த திணைக்களம் என்ன செய்து கொண்டிருக்கிறது எனக் கேள்வியெழுப்புகின்றார்கள். நான் நடந்து செல்கின்ற பாதையில் என் முதுகைச் சொறிகின்ற முள்ளுமரத்தை அங்கிருந்து அகற்ற வேண்டிய பொறுப்பு இன்னொரு திணைக்களத்துக்குரியதா? அல்லது நானா அதைச் செய்யவேண்டும்? தத்தமது பிரதேசங்களைச் சரியான முறையில் சுத்தப்படுத்திப் பராமரிப்பதற்குப் பிரதேச மக்களை ஒவ்வொரு பிரதேச செயலர்களும் பழக்கப்படுத்த வேண்டும் - என்றார். (அ-ஓ.66)

## விமானத்தில்...

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு மெல்பேர்னில் இருந்து புறப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணித்தவரே உயிரிழந்தார். அவரது சடலம் கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த இரத்னலிங்கம் இராமலிங்கம் (வயது -75) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என விமான நிலையக் கடமை அதிகாரி தெரிவித்தார். மெல்பேர்ன் விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் பயணி நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார். ஆயினும், விமானிகள் மெல்பேர்னுக்கு திரும்பாமல் கட்டுநாயக்கவுக்குச் செல்ல தீர்மானித்தனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (அ-ஓ.இ)

## வாராந்த...

பொருள் ஒதுக்கீடு நாளை செவ்வாய்க் கிழமை முதல் நடைமுறைக்குவரும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 22 லீற்றராக அதிகரிக்கப்படவுள்ளது. ஏனைய முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 14 லீற்றராக அதிகரிக்கப்படவுள்ளது.

கார் போன்ற வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 40 லீற்றராகவும், பேருந்து மற்றும் பாரவூர்திகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 125 லீற்றராகவும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசேட தேவை வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கம் 45 லீற்றராகவும் அதிகரிக்கப்படவுள்ளது. ஏனைய வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கம், 45 லீற்றராக அதிகரிக்கப்படவுள்ளது. (அ-ஓ.இ)

## பொது...

நிலையில் அந்த நிலைப்பாட்டை இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் எதிர்த்துள்ளனர். ஆனால், தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஆதரித்துள்ளனர்.

'படையிலிருந்து உயிரிழந்தவனும், படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு உயிரிழந்தவனும் ஒன்றல்ல. மக்கள் தாம் விரும்பும் இடத்தில் நினைவேந்த உரித்து உண்டு. அதனைத் தடுத்து பொதுத்தூபியில்தான் நினைவேந்த முடியும் என்று கட்டளையிட முனைவது பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மேலும் பாதிக்கச்செய்யும். பொதுத்தூபி அமைக்கப்படுவதையும் அங்குதான் தமிழ் மக்களும் நினைவேந்தவேண்டும் என்பதையும் எதிர்க்கின்றேன்' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

'பொதுத்தூபி அமைத்து இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் மலர்ந்து விட்டது என்று சர்வதேசத்துக்குக் காண்பிக்க அரசு திட்டமிடுகின்றது. இனப்படுகொலை புரிந்த படையினருக்கும், விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் இனத்திலிருந்து மடிந்தவர்களுக்கும் ஒரே இடத்தில் நினைவேந்தலைச் செய்ய முடியாது. அது இயற்கைக்கு முரணானது' என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

'படையினரையும் அவர்களால் கொல்லப்பட்ட மக்களையும் ஒரே இடத்தில் நினைவுகூர முற்படுவதானது கேலிக்கூத்தானது. இது இனங்களிடையே மேலும் விரிசலையே ஏற்படுத்தும்' என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

'பாதிக்கப்பட்ட எமது மக்கள் கொழும்புக்கு வந்து பொதுத்தூபியில் தங்கள் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் என்பதும், அவர்களது உறவுகளின் இழப்புக்குப் பொறுப்புக்கூறவேண்டிய படையினருக்கும் அதே இடத்தில் நினைவுகூரலைச் செய்வது என்பதும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப்போன்றதாகும்' என்று ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

'பொறுப்புக்கூற வேண்டிய படையினருடன் இணைந்து எப்படி தமிழ் மக்கள் நினைவுகூரமுடியும்?' என்று கேள்வி எழுப்பினார் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

'இதனைத் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே பார்க்கின்றேன். இத்தனை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்மறையாகச் சிந்தித்தவர்கள் தற்போது மாறுபட்டு சிந்திக்கின்றார்கள். இந்தச் சிந்தனையானது இதயசுத்தியாக இருக்க வேண்டும்' என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'1983 - 2009 உள்நாட்டு இறுதிப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் பலர் உயிரிழந்துள்ளனர். அவர்களை ஒன்றாக நினைவு கூருவதற்கு நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சரவையில் முன்வைத்தேன். எனது கோரிக்கையை ஜனாதிபதி சாதகமாகப் பரிசீலித்த நிலையில் கொழும்பில் நினைவுத் தூபியை அமைப்பதற்கான இடத்தை அடையாளப்படுத்துவதற்காகக் குழு அமைப்பதாகத் தெரிவித்தார். ஜனாதிபதியின் சாதகமான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று ஈ.பி.டி.பி.யின் செயலரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ-ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஊழியர் இருந்தாலும் ஈ.பி.எவ். மிக அவசியம்!

### *தொழிலாளர் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானம்*

கொழும்பு, மே 29

ஒரு நிறுவனம், ஒரேயொரு ஊழியரைக் கொண்டிருந்தாலும், அந்த நிறுவனமும் தமது தொழிலாளியை ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியில் உள்வாங்க வேண்டும் என்ற சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. அதற்கமையவே தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது நாட்டில் 80 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் தமது ஊழியர்களை ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றில் உள்வாங்கியுள்ளன.

எனினும் சட்ட திருத்தங்களின் ஊடாக ஒரேயொரு ஊழியரைக் கொண்டிருந்தாலும், அந்த நிறுவனமும் தமது தொழிலாளியை ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியில் உள்வாங்க வேண்டும் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துவதே எமது இலக்காகும். மாறாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றைக் குறைப்பதோ அல்லது அவற்றை இரத்து செய்வதோ எமது நோக்கமல்ல.

ஓய்வுபெற்றதன் பின்னர் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கான உத்தரவாதத்துக்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். தொழி லைப் பாதுகாப்பதற்குப் பதிலாக தொழில்வாய்ப்புக்களைப் பாதுகாப்பதே எமது இலக்காகும்.

பெரும்பாலான தனியார் நிறுவனங்களில் தற்போதும் முறையான காப்புறுதித் திட்டங்கள் இல்லை. எனவே அரச உத்தியோகத்தர் களைப் போன்றே தனியார் துறையினருக்கும், மருத்துவம் உள்ளிட்ட சலுகைகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்த சட்ட திருத்தங்களின்போது தொழிலாளர்கள் உரிமைகள், சலுகைகள் என்பன இரத்துச் செய்யப்படவுள்ளதாக போலியான செய்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ய-இ)

## தங்கம் கடத்திய மொட்டு எம்.பி. மாதாந்தம் வெளிநாட்டுப் பயணம்

### அம்பலப்படுத்துகிறார் டலஸ்

கொழும்பு, மே 29

தங்கத்தைக் கடத்திய குற்றச்சாட்டில் கைதான சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் வெளிநாடு சென்றுள்ளதாகவும், இந்த மாதத்தில் மாத்திரம் ஐந்து தடவைகள் வெளிநாடு சென்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வெரு மாதமும் குறைந்தது இரண்டு தடவைகளேனும் இவர் பிரமுகர் நுழைவாயில் ஊடாக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். இந்த மாதத்தில் மாத்திரம் ஐந்து தடவைகள் வெளிநாடு சென்றுள்ளார்.

வாக்கெடுப்பு தினத்தன்று வந்தார். அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கிறார். நான் அந்தத் தலைவருக்குக் கூறினேன், இந்தத் தலைவருக்குக் கூறினேன், அவர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை. அதனால், அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்ததாக அவர் கூறுகிறார்.

மிகவும் அழகான கதை ஒன்றே இது. சிறந்த நடிகருக்கான விருது இவருக்கு வழங்கப்படவேண்டும். இவர் அடுத்த நாளே டுபாய்க்கு சென்றுள்ளார். அவருக்கு மனசாட்சி இருந்தால் பதவியிலிருந்து விலகவேண்டும் - என்றார். (அ-ஒ.இ)

## மன். தமிழரசுக் கட்சி புதிய தலைவர் தெரிவு

தமிழரசுக் கட்சியின் மன்னார் பிரதேச கிளைத் தலைவராக சட்டத்தரணி டினேஸன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேச தமிழரசுக் கட்சியின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது. இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும் சட்டத்தரணியுமான செ.டினேஸன் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (சு-213)

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, மே 29

வடமேல், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை- ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழையும், காலி ஊடாக மாத்தறை வரையான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பரவலாகவும் மழை பெய்யக்கூடும்- என்றுள்ளது. (ய-இ)

## வெளிநாடுகளுக்குச் செல்ல இம்ரான்கானுக்குத் தடை!

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் தெஹ்ரிப் இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான், வெளிநாட்டுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை தொடர்பில் இம்ரான்கான் தெரிவித்ததாவது:

வெளியேறுதல் தடைப் பட்டியலில் எனது பெயரை இணைத்ததற்காக பாகிஸ்தான் அரசுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஏனெனில் வெளிநாடு செல்வதற்கான திட்டம் எதுவும் என்னிடம் இல்லை. ஏனெனில் வெளிநாடுகளில் எனக்கு சொத்துகளோ, வர்த்தகமோ இல்லை. ஒரு வங்கிக் கணக்குக்கூட இல்லை - என்றார். (ம)



மலையக மக்களின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கிராமிய உழைப்பாளர் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பலர் பங்கேற்றனர். (சு-20)


## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து (V) குடும்பத்தைச் சேர்ந்த 1985-11-30ம் திகதி திருவாதிரை நட்சத்திரம் மிதுன ராசி கிரக பாவம் 19 1/4 பிறந்த நேரம் நள்ளிரவு 12.25 சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
வரதட்சணை எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: 077 8051 655

(CS 250861A-1)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

தொடர்பு: 077 6385 683, 076 7558 606

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இளவாலையில் 36 பரப்பு **(நிலப்பரப்பு)** காணி விற்பனைக்கு.

* இளவாலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* இளவாலை சந்தியில் இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* ஒரு பரப்பின் விலை : எட்டு லட்சம் ரூபாய் (800,000/=)

தொடர்பு: 076 911 9371, 076 165 3129

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 13 பரப்புக் காணி விற்பனைக்கு

* 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* வட்டுக்கோட்டை மாவடி சந்தியிலிருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200 m தூரத்தில். (உபவில் வீதி, பிரதான காபற் வீதி முகப்புடன்)
* யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் 786 வழி இலக்க தனியார் அரச பேரூந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200 m தூரம்.
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* நன்னீர் ஊற்று நிலம்
* மாவடி சந்தியிலிருந்து 800 m தூரத்தில்.

தொடர்பு: 076 7390 413, 076 733 6093




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.